திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பத்தூர் தொகுதியில் உள்ள ஜவ்வாது மலை, ஏலகிரி மலை மிகவும் பின்தங்கிய பகுதிகள். இங்கே சுமார் 25 ஆயிரம் பழங்குடியின மக்கள் வசிக்கிறார்கள். மலைவாழ் மக்களுக்குத் தெரிந்த ஒரே தலைவி நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவிதான். ஜவ்வாது மலையில் சரியான ரோடு வசதி மற்றும் அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் அல்லல்படுகிறார்கள். ஜவ்வாது மலையில் விளையும் சந்தனத்தால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. எனவே, ஜவ்வாது மலையில் வாழும் மக்கள் வளம்பெற, இவர்களுடைய பிள்ளைகள் முன்னேற்றம் அடைய ஜவ்வாது மலையில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளியை அவசியம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் அரசினரால் 2 தொழிற் பயிற்சி நிலையங்களும், தனியாரால் 26 தொழிற் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. திருப்பத்தூரில் மட்டும் 4 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே இவர்களுக்கென்று தனியாக தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், இருக்கையில் இல்லை. திரு. இராம இராமநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

315-

மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் அண்ணா நகருக்குக் குடிநீர் வசதி அளித்தல்

***21974*—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் அண்ணா நகர் பகுதிக்குக் குடிநீர் வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

1994 ஏப்ரல் 20]

(ஆ) ஆம் எனில், அங்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை நகராட்சியினரால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இராம இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தன், ஏசு, காந்தி பூமியில் பிறந்தது எதற்காக; தோழன் ஏழைகள் நமக்காக; அண்ணா, எம்.ஜி.ஆர்., எங்கள் தலைவி இந்த பூமியில் பிறந்தது எதற்காக; இங்கே இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் நலனுக்காக என்கின்ற அந்த இனிய தொடர்களோடு கங்கை, யமுனை, காவிரி, வைகை ஓடுவது எதற்காக; நாளும் உழைத்து தாகம் எடுத்த தோழர்கள் நமக்காக என்று காவிரிக் கரையில் அமைந்துள்ள அந்த மயிலாடுதுறை பகுதியில் வாழ்கின்ற மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குகின்ற விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். மக்கள் பிரச்சினைகளை, மக்களுடைய உயிர்நாடிப் பிரச்சினையாக இருக்கிற குடிதண்ணீர் பிரச்சினையைக் கூட இங்கே வந்து கேட்காமல், கேள்விக் கணைகளைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதில்பெறக்கூட இங்கே இல்லாமல் இருக்கின்ற அந்தத் தொகுதியும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய எதிர்கால, வருங்கால, நிகழ்கால கோட்டை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லி, அதற்குத் துரித நடவடிக்கை எடுத்து, குடிதண்ணீர் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வியை எழுப்பிவிட்டு, பதில் கூறும்போது, இங்கே வந்து கேட்காமல் இருந்தாலும்கூட, அவர்களுக்கு அந்த அக்கறை இல்லாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசைப் பொறுத்தவரை, செய்ய வேண்டிய காரியத்தை, செய்ய வேண்டிய காலகட்டத்திலே செய்து முடிக்கின்ற வல்லமை படைத்த அரசாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது.

அடிப்படையிலே, நான் இந்த வினாவிற்குப் பதில் அளிக்கின்றபொழுது, இதற்குண்டான அத்துணை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று சொன்னேன். மயிலாடுதுறை நகராட்சியைப் பொறுத்தவரை, மயிலாடுதுறை காந்தி நகர் பகுதியில் ஏற்கெனவே ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிலேயிருந்து சுமார் 200 மீட்டர் தூரமுள்ள அண்ணா நகர் பகுதிக்குக் குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்குவதற்காக நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் மயிலாடுதுறை நகராட்சி, திருவிழந்தூர் அண்ணா நகர் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இந்தியா மார்க்-2 கைப்பம்பு அமைக்கப்பட்டு நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது சில குறைபாடுகள் காரணமாக நல்லமுறையிலே இயங்கவில்லை. எனவே, பக்கத்திலே இருக்கின்ற காந்தி நகர் பகுதியிலேயிருந்து 200 மீட்டர் தூரத்திற்குக் குழாய்களை நீட்டித்து குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 316, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

316—

உதகமண்டலம் நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

***22334**—டாக்டர் அ. ஸ்ரீதரன் :*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1989 முதல் 1993 வரை நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகருக்குக் குடிநீர் வழங்க நிறைவேற்றப்பட்ட ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உதகை நகராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தில் பகிர்மானக் குழாய் பதித்தல் மற்றும் எஞ்சிய சிறு பணிகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய, சுமார் ரூ. 5 கோடிக்கு நீலகிரி மாவட்டம் ஊட்டிக்குக் குடிநீர் தருவதற்காக